بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்

December 6 2013

தமிழாக்கம் : மவ்லவி M. நிஸாமுத்தீன் சாஹிப்

# சுய பரிசோதனையும் சுய சீர்திருத்தமும்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

சென்ற குத்பாவில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய குத்பாவின் அடிப்படையில் செயல்ரீதியான சீர்திருத்தத்தின் பக்கம் கவனமூட்டப்பட்டிருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை நெறிமுறைகளை விளக்கியிருந்தேன். மேலும் அன்னாருடைய பேரன்பரின் உண்மை என்ற நல்லொழுக்கப் பண்பும் மிக விரிவாக விளக்கப்பட்டிருந்தது. மிக உயரிய அந்தஸ்தில் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும், அவர்களைப் பின்பற்றி அவர்களின் உண்மைப் பேரன்பரும் நிலைநின்றார்கள். அந்த அந்தஸ்தின் உயர்வு, அந்த முன்மாதிரியைப் பின்பற்றியதன் காரணமாக சஹாபாக்களையும் மிக உயரிய இடத்திற்கு இட்டுச் சென்று விட்டது.

உண்மை சம்பந்தமாக ஒரு விசயம் உதாரணமாகத் தரப்பட்டது. உண்மையில் அல்லாஹ் அவர்களை செய்யுமாறு கட்டளையிட்ட ஒவ்வொரு நன்மையையும் செய்து, அல்லாஹ் தடுத்திருந்த ஒவ்வொரு தீமையிலிருந்தும் விலகி இருந்தது மட்டுமன்றி, அவற்றை வெறுத்ததும் தான் செயல் சீர்திருத்தத்தின் வேராக உள்ளது. எனவே நன்மையின் உயரிய நல்லொழுக்கம் நம்மில் உருவாகும்போது தான் நாம் உண்மையான முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுவோம்; காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டவர் என்று அழைக்கப்படுவோம். அந்த நல்லொழுக்கத்தை உருவாக்குமாறு அல்லாஹ் ஓர் உண்மையான முஸ்லிமுக்கு கட்டளை இட்டுள்ளான்.

இன்னொரு பக்கம் தீமையின் மீது அளவு கடந்த வெறுப்பு இருக்க வேண்டும். ஏனெனில் ஓர் உண்மையான முஸ்லிம் நேர்மையைத் தேடி அதனை நெஞ்சோடு அணைத்தவாறும், தீமையிலிருந்து விலகி ஓடுபவராகவும் இருக்க வேண்டும். அப்போது தான் அவர் உறுதியுடன் தனது விவகாரத்தில் முழுமையடைய முடியும். அவர் நன்மைக்கும் தீமைக்கும் இடையில் தொங்குபவராக இருந்து கொண்டு தனது வார்த்தையை மட்டும் உச்சத்தொணியில் உயர்த்துபவராக இருக்கக் கூடாது.

கொள்கை அடிப்படையில் நம்மிடம் வலுவான ஆதாரங்கள் உள்ளன என்றும் சென்ற குத்பாவில் கூறியிருந்தேன். அவற்றை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் உண்மைக்காகவும், அஹ்மதிய்யத்தின் உண்மைக்காகவும் வழங்கினார்கள். அவற்றின் காரணத்தால் நாம் கொள்கை விசயத்தில் எதிரிகளை விட முன்னேறிச் சென்று விட்டோம். பரிகாசம், பிடிவாதம் மற்றும் குறுகிய மனப்பான்மையின் காரணமாக அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் அது வேறு விசயம். ஆனால் எவ்வாறிருப்பினும் இஸ்லாத்தின் எதிரிகளிடம் அதற்கு மறுப்பு இல்லை. இதனால் அஹ்மதிகளிடம் விவாதம் செய்வதை விட்டும் தவிர்ந்து கொள்ளவே விரும்புகின்றனர்.

ஹிவாருல் முபாஷிர் என்ற நமது அரபி நிகழ்ச்சியில் பல கிறித்தவர்கள் கூட அஹ்மதிய்யா ஜமாஅத்திடம் வலுவான ஆதாரங்கள் இருப்பதாக ஒப்புக் கொண்டுள்ளனர். அதுபோன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உண்மைக்கு நம்மிடம் பல ஆதாரங்கள் உள்ளன. ஒருபுறம் இஸ்லாத்தின் உண்மையை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துகிறோம். இன்னொரு பக்கம் அஹ்மதிய்யத்தின் மீது முஸ்லிம்கள் செய்யும் ஆட்சேபனைகளுக்கும் அதில் மறுப்பு உள்ளது. எதிரிகள் பிடிவாதம் பிடிக்காமல், திரித்து வளைத்து கருத்துத் தொடர்ச்சியில் இருந்து விலகி, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சொற்களை எடுத்து வைக்கா விட்டால் அஹ்மதிய்யத்தின் உண்மையை ஏற்பதை விட அவர்களுக்கு வேறு வழியே இல்லை.

ஆனால் அந்த உலமாக்களின் சுயநலன்கள், பொய்யின் மூலம் பொதுமக்களை குழப்புமாறு அவர்களைத் தூண்டுகின்றன. ஆதாரங்கள் இல்லாத போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக தீய சொற்களைப் பேசுகின்றனர். சான்றுகளைப் பொருத்தவரையில் நம் தரப்பு இஸ்லாத்தின் எதிரிகள் மீது மிகவும் வலுவாகவே சூழ்ந்திருக்கின்றது. நம்மில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய புத்தகங்களைத் தொடர்ந்து வாசிக்கின்றவர்கள் மற்றும் புரிய முயற்சி செய்பவர்களின் முன்னால் எதிரிகள் எவரும் நிற்க முடியாது.

இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஒரு வாதமும் ஆகும். எனது நூல்களைப் படித்தால் உங்கள் முன் எவரும் நிற்க முடியாது என்று கூறியுள்ளார்கள். ஆனால் நாம் இன்னொரு கோணத்தில் பார்த்தால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடத்தில் உருவாக்க விரும்பிய செயல் சீர்திருத்தத்தின் நிலை எவ்வாறு உள்ளது? என்று பார்த்தால் கவலை ஏற்படுகிறது. இது குறித்து கேள்வி எழுகிறது.

நம்மில் ஒவ்வொருவரும் சமுதாயத்தின் ஒவ்வொரு தீமைக்கு எதிராகவும் போராடி அவற்றை தோல்வி அடையச் செய்கின்றோமா? நம்மில் ஒவ்வொருவரின் செயலையும் பார்த்து அந்த சுற்றுவட்டாரத்தில் வசிக்கின்றவர்கள் நம்மவர்களின் தாக்கத்திற்கு உள்ளாகின்றார்களா? அல்லது நாம் நமது சுற்றுப்புறத்தின் தாக்கத்திற்கு உள்ளாகி இஸ்லாத்தின் போதனைகளையும், நடைமுறைகளையும் மறந்து கொண்டே செல்கிறோமா? நம்மில் ஒவ்வொருவரும் முழுவதுமாக முயன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு போதித்தது போன்று செயல் சீர்திருத்தம் செய்கிறோமா? நம்மிடம் எதிர்பார்க்கப்பட்ட அளவு செய்கின்றோமா? பொய்யும் தந்திரங்களும் நம் அருகிலும் வராத அளவுக்கு உண்மையின் மீது நிலைநின்று விட்டோமா? நாம் நமது உலகியல் தொடர்புகளை வைத்துக் கொண்டே மறுமையின் மீதும் பார்வையின் வைத்துள்ளோமா? நாம் உண்மையிலேயே மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்குகின்றோமா? ஒவ்வொரு தீமையிலும் தீய செயல்களிலும் இருந்து நம்மில் ஒவ்வொருவரும் மிகவும் எச்சரிக்கையாக இருந்து தப்பிக்க முயல்கின்றோமா? ஒருவரின் உரிமையைப் பறிப்பதிலிருந்து விலகியும், அனுமதிக்கப்படாத காரியங்களில் ஈடுபாடு காட்டுவதை விட்டு விலகியும் இருக்கின்றோமா?

நாம் ஐவேளை தொழுகையைப் பேணுகின்றோமா? நாம் எப்போதும் துஆவில் ஈடுபடுபவர்களாகவும் இருக்கின்றோமா? நாம் தீய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கெட்ட நண்பர்களை விட்டு, தாய் தந்தைகளுக்கு தொண்டு செய்து அவர்களுக்கு மதிப்பு கொடுப்பவர்களாகவும், நல்ல விசயங்களில் அவர்களின் கூற்றை ஒப்புக் கொள்பவர்களாகவும் இருக்கின்றோமா? நாம் நமது மனைவி மற்றும் உறவினர்களுடன் மென்மையுடன் நடந்து கொள்கின்றோமா? நாம் நமது அண்டை அயலாரை சின்னஞ்சிறு நன்மைகளிலிருந்து கூட விலக்கி வைக்காமல் இருக்கின்றோமா? நமது உள்ளம் மற்றவர்களிடம் பொறாமை, காழ்ப்புணர்ச்சி காட்டுவதிலிருந்து தூய்மையாக உள்ளதா? நமது ஒவ்வொரு கணவரும் ஒவ்வொரு மனைவியும் ஒருவர் மற்றவரின் அமானிதத்தைப் பேணுபவர்களாக உள்ளோமா? நாம் பைஅத் உடன்படிக்கையை முன்வைத்து நமது நிலையை உற்றுநோக்குபவர்களாக இருக்கின்றோமா? நமது சபைகள் மற்றவர்கள் மீது அவதூறு கூறுவதை விட்டும், புறம் பேசுவதை விட்டும் தூய்மையாக இருக்கின்றனவா? நமது அதிகமான சபைகள் அல்லாஹ்வை நினைவு கூறும் சபைகளாக உள்ளனவா? இவற்றின் பதில் எதிர்மறையாக இருக்கும் எனில் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய போதனையிலிருந்து தூரத்தில் உள்ளோம். நாம் நமது அமலின் நிலை குறித்து கவலைப்பட வேண்டும். இவைகளுக்கு பதில் ஆம் எனில் நம்மில் அத்தகையோர் நற்பேறு பெற்றவர்கள் ஆவர். அவர்கள் செயல் சீர்திருத்தத்தின் மீது கவனம் செலுத்தி பைஅத்தின் உரிமையை நிறைவேற்றியவர்களாவோம். உண்மையில் நாம் உண்மையின் கண்களால் பார்த்தால் அநேகமாக சமுதாய தாக்கத்திற்கு உள்ளாகி நாம் இந்த விசயங்களில் அல்லது இவற்றுள் அநேகமான விசயங்களில் கவனம் செலுத்துவதில்லை. சமுதாயத்தின் தவறுகள் மீண்டும் மீண்டும் நம்முள் நுழைய முயன்று கொண்டுள்ளன. நாம் பல நேரங்களில் ஒன்றும் இயலாதவர்களாகி விடுகிறோம்.

நம்மில் 99.99 சதவீத்தினர், கொள்கை அடிப்படையில் நாங்கள் உறுதியானவர்கள் என்று வாதிக்கின்றோம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எவராலும் நம்மை நமது கொள்கையிலிருந்து அசைக்க முடியாது; விலக்க முடியாது. ஆனால் நான் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். சமுதாயத்தில் வலுவான அலைகளால் வந்து விடுகின்ற செயல் பலவீனங்கள் கொள்கையின் வேரையும் அசைக்கத் தொடங்கி விடுகின்றன. சய்த்தான் சிறிது சிறிதாக தாக்குதல் நடத்தத் தொடங்குகின்றான். ஜமாஅத் அமைப்பில் இருந்து இடைவெளி ஏற்படுகிறது. பிறகு ஓரடி முன்னேறி கிலாஃபத்தை விட்டும் இடைவெளி ஏற்படுகிறது.

ஆகவே நினைவில் கொள்ளுங்கள். ஒரு பலவீனம் இன்னொரு பலவீனத்திற்குக் காரணமாகி விடுகிறது. இறுதியில் எல்லாம் அழிந்து விடுகின்றன. நாம் அறிவோம். ஜமாஅத்தின் அழகே ஜமாஅத் அமைப்பிலும், கிலாஃபத் அமைப்பிலும் ஒன்றுசேர்வது தான். அதுவே நமது கொள்கைப் பிடிப்பும் செயல் வலுவும் ஆகும். எனவே தான் கலீஃபாக்கள் மூலம் எப்போதும் பலவீனங்களைச் சுட்டிக்காட்டி ஜமாஅத்திற்கு கவனமூட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் மூலம் திரும்பி வருவதற்குப் பாதை கிடைக்காத அளவுக்கு தொலைவில் போய் விடாமல் செய்யப்படுகிறது. இதனால் இஸ்திக்ஃபார் செய்து அவர் தமது செயல் பலவீனங்களை உற்று நோக்குகிறார். பலவீனங்களை அகற்ற முயல்கிறார். அல்லாஹ்வின் உபகாரங்களை நினைவு கூறுகிறார்.

தற்போதைய எனது தூரக் கிழக்கு நாடுகளின் சுற்றுப்பயணத்தில் இந்தோனேஷியாவைச் சேர்ந்த ஜமாஅத் அல்லாத சில அறிஞர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. சிங்கப்பூரின் வரவேற்பு நிகழ்ச்சியில் அந்த சந்திப்பு நிகழ்ந்தது. எனது சுற்றுப்பயண விவரத்தில் அதனை கூறி விட்டேன். பலர் அதில் இக்கருத்தை ஏற்றுக் கொண்டனர். அதாவது நமது அறிஞர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமுடைய சொல்லைக் கேட்க வேண்டும் என்றனர்.

எவ்வாறிருப்பினும் அவர்களின் ஒரு கேள்விக்குப் பதிலாக நான் இதையே கூறினேன். இன்று உலகில் ஜமாஅத் அஹ்மதிய்யா மட்டுமே பிராந்திய அளவிலோ, நாட்டின் அளவிலோ அல்லாமல் முழு உலகிலும் ஒரே பெயரிலுள்ள ஒரு ஜமாஅத் ஆகும். உலகம் முழுவதும் ஒரே அமைப்பாக செயல்படுகிறது. ஒரே ஓர் இமாமுடன் தொடர்பு வைத்துள்ளனர். உலகின் ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு சமுதாயமும், இனமும் இதில் உள்ளனர். எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது கூற்று, முன்னறிவிப்பிற்கு இது ஒரு பெரிய ஆதாரமாகும். முஸ்லிம் உம்மத் ஒரே ஒரு ஜமாஅத் ஆக இருக்கும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரின் உண்மைக்கும் இது ஒரு ஆதாரமாகும். அறிவுள்ள நல்லியல்புள்ள எதிரிகளும் கூட இதனைக் கேட்டு மௌனமாகி விடுகின்றனர். இது குறித்து யோசிக்கின்றனர்.

ஆனால் இந்த ஆதாரத்தை நிரந்தரமாக நிலைநிறுத்துவதற்காக நம்மில் ஒவ்வொருவரும் நமது அமலின் நிலையின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இக்காலத்தில் சய்த்தான் முன்னரை விட அதிகமாக ஆவேசமாக உள்ளான். இக்காலத்தின் நடைமுறை ஆபத்துகள், சமுதாயத்தின் தீமைகள் பரவலாக உள்ளன. கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் இதற்கு சட்டரீதியான பாதுகாப்பு வழங்கப்படுகின்றது. இதற்கு முன்னர் இத்தீமைகள் எல்லைக்குட்பட்டே இருந்தன. அதாவது வட்டாரத்தின் தீமைகள் வட்டார அளவிலும் நகரத்தின் தீமைகள் நகர அளவிலும், நாட்டின் தீமைகள் நாட்டளவிலும் இருந்தன. அதிகபட்சம் அருகில் இருப்பவர்கள் மட்டும் தாக்கத்திற்கு உள்ளாகி இருந்தனர்.

ஆனால் இன்று எளிதான பயணம், டி.வி., இன்டர்நெட், பல்வேறு ஊடகங்கள் ஆகியவை ஒவ்வொரு தனிப்பட்ட உள்ளூர் தீமைகளையும் கூட உலகளாவிய தீமைகளாக ஆக்கி விட்டன. இன்டர்நெட்டின் மூலம் ஆயிரக்கணக்கான மைல் தொலைவில் உள்ளவர்களையும் தொடர்பு கொண்டு தீமைகள் பரப்பப்படுகின்றன. இளம் பெண்களைக் குழப்பி அவர்களின் அமலின் நிலையில் பலவீனத்தை ஏற்படுத்துவது ஒருபுறம் இருக்கட்டும்! மார்க்கத்திலிருந்தே அவர்களை தூர விலக்கப்படுகின்றது.

கடந்த சில தினங்களுக்கு முன் ஒரு செய்தி எனக்கு வந்தது. அது பாகிஸ்தான் மற்றும் சில நாடுகளில் இருந்து வந்த செய்திகள் தான். இளம் பெண்களை திருமணம் செய்து பிறகு விபச்சாரியாக்கி விடுகின்றனர். அதாவது தற்காலிகமாக திருமணம் செய்து அவ்வாறு செய்கின்றனர். இக்குழுவினர் உலகம் தழுவிய அளவில் இதனை செய்கின்றனர். நிச்சயமாக இது பயங்கரமானது. நம்மை புல்லரிக்க வைக்கின்றது. இவ்வாறு இளைஞர்களையும் செயல் ரீதியிலும் கொள்கை அடிப்படையிலும் முற்றிலும் பேதலிக்க வைத்து விடுகின்றனர்.

அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் இந்த அசுத்தங்களில் இருந்து பாதுகாப்பானாக என்று துஆ செய்வதுடன் இவற்றில் இருந்து தப்பிப்பதற்கு ஒவ்வொரு அஹ்மதியும் ஒரு ஜிஹாது செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. காலத்தின் கண்டுபிடிப்புகளிலிருந்து பயன் பெறுவதற்குத் தடையில்லை. ஆனால் ஓர் அஹ்மதிக்கு எப்போதும் நினைவில் கொள்ள வேண்டிய விசயமாவது, ஓர் அஹ்மதி, காலத்தின் வசதிகளைப் பயன்படுத்தி இஸ்லாத்தைப் பரப்புவதை முழுமைப்படுத்துவதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு உதவியாளராக இருக்க வேண்டும். அதுவன்றி வெட்கமற்ற, கோட்பாடற்ற, மார்க்கமற்ற செயல்களின் தாக்கத்திற்கு ஆளாகி எதிரிகளிடம் தம்மைத்தாமே ஒப்படைத்து விடக் கூடாது. ஒவ்வொரு அஹ்மதிக்கும் இது சிந்திக்க வேண்டிய இடமாகும். நமது பெரியவர்களிடமும் நமது

முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டும். அதன் மூலமே வருங்கால சந்ததியினர் இந்த உலகின் குழப்பங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும். நமது இளைஞர்களும் அல்லாஹ்விடம் உதவி கேட்டவாறு முழுமையான முயற்சி செய்து எதிரிகளின் தாக்கத்திலிருந்து தப்பிக்க வேண்டும். அந்த எதிரி உணர முடியாத வழியில் தாக்குதல் தொடுக்கின்றான். அந்த எதிரி, உல்லாசம், நேரப்போக்கு என்ற பெயரில் நமது வீடுகளில் நுழைந்து ஜமாஅத்தின் இளைஞர்களையும் பலவீனமான இயல்புள்ளவர்களையும் தாக்கத் தொடங்குகின்றான். அவர்களிடம் குறைபாட்டை ஏற்படுத்த முயல்கின்றான்.

நான் கூறியது போன்று சந்தேகமின்றி அஹ்மதிய்ய கலீஃபாக்கள் செயல் சீர்திருத்த முன்னேற்றத்தின் பக்கம் தனது குத்பாக்களில் கவனமூட்டிக் கொண்டேதான் இருந்தனர். நானும் எனது குத்பாக்களில் இந்த குறைபாட்டைக் களைய கவனமூட்டிதான் வருகிறேன். அந்த வழிகாட்டலின் ஒளியில் கிளை அமைப்புகளும், ஜமாஅத் அமைப்பும் திட்டமிடுகிறார்கள். அதன் மூலம் ஒவ்வொரு வட்டமும், ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள அஹ்மதிகளும் எதிரிகளின் தாக்கத்திலிருந்து தப்பிக்க முயல வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் செயல் சீர்திருத்தத்தின் பக்கம் சுயமாக முயன்றால், மார்க்க எதிரிகளின் தாக்கத்தைச் செயலிழக்கச் செய்ய எழுந்து நின்றால் – அது மட்டும் போதாது. உறுதி எடுத்தவாறு நிற்க வேண்டும். வெறுமனே தற்காப்பு செய்தால் போதாது. பிறரையும் சீர்திருத்தம் செய்ய வேண்டும்.

இந்த நோக்கத்தைப் பெறுவதற்கு இறைவனுடன் ஒரு சிறப்பான தொடர்பு கொள்ள வேண்டும். நாம் மார்க்க எதிரிகளைச் செயலிழக்கச் செய்வது மட்டுமின்றி, அவர்களையும் சீர்திருத்தி உலகையும் மறுமையையும் பெறுபவர்களாக ஆக்க வேண்டும். அதுமட்டுமின்றி, நமது அடுத்த தலைமுறைகளை தமது தீய தாக்கத்தின் கீழ் கொண்டு வர விரும்புகின்ற இந்த குழப்பத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். நமது அடுத்த தலைமுறைகளை இதன் மூலம் நாம் பாதுகாக்க வேண்டும். நாம் நமது பலவீனர்களின் ஈமானையும் இதன் மூலம் பாதுகாப்போம். பிறகு அந்த செயல் சீர்திருத்தத்தின் விழிப்புணர்வு ஒருவரிடமிருந்து மற்றவருக்கு சென்று கொண்டே இருக்கும். இந்த தொடர் கியாமத் வரை செல்லும். நமது செயல் சீர்திருத்தத்தின் மூலம் தப்லீகின் வழிகள் மேலும் மேலும் திறந்து கொண்டே செல்லும். புதிய கண்டுபிடிப்புகள், தீமைகளைப் பரப்புவதற்குப் பதிலாக ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு பகுதியிலும் இறைவனின் பெயரைப் பரப்பும் ஊடகமாகி விடும்.

நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நமது யதார்த்த நிலைகளை விட்டும் ஒருபோதும் நாம் நமது பார்வைகளைத் திருப்ப முடியாது. ஏனெனில் வளரும் சமுதாயம் உலகை சீர்திருத்தம் செய்யும் சமுதாயம் – உலகில் புரட்சி செய்யும் சமுதாயம் தனது பலவீனங்களை உற்று நோக்கும். கண்களை மூடிக் கொண்டு எல்லாமே சரியாக இருக்கிறது என்று கூறினால் அது நமது பாதையில் தடையைப் போடுவதாகும். எவ்வாறிருப்பினும் நமது அசல் நிலையின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் தான். நாம் 50 சதவீதம் சீர்திருத்தம் நடந்து விட்டது என்று மகிழ்ந்து விட முடியாது. அல்லது இத்தனை சதவீதம் சீர்திருத்தம் ஏற்பட்டு விட்டது என்று மகிழ முடியாது. மாறாக நாம் உலகில் புரட்சி கொண்டு வர வேண்டும் எனில் 100 சதவீத இலக்கு வைக்க வேண்டும்.

இன்னொன்றும் கூற விரும்புகிறேன். நாம் செயல் சீர்திருத்தத்தில் 100 சதவீத வெற்றி பெற்று விட்டால் நமது சண்டை சச்சரவுகள், வழக்குகள், பிறருக்கு பொருளாதார நஷ்டம் ஏற்படுத்த முயலுதல், பொருளை அபகரித்தல், டி.வி. முதலியவற்றில் வீணான நிகழ்ச்சிகளைப் பார்த்தல், பிறரை கண்ணியக்குறைவாக நடத்துதல், பிறரை மட்டம் தட்ட முயலுதல் ஆகிய அனைத்து தீமைகளும் அழிந்து விடும். அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவை இவ்வுலகை சொர்க்கமாக்கி விடும்.

அத்தகைய தீமைகள் இப்போதும் ஜமாஅத்தில் காணப்படுகின்றன. சில விவகாரங்கள் அவ்வாறு வருவதால் நான் இதனை குறிப்பிடுகின்றேன். நமது பொறுப்புகளைப் பற்றிய உணர்வு நம்மிடம் உருவாகி விட்டால் மார்க்கத் தொண்டின் உயரிய இலக்கை இறை அருளாகக் கருதி செய்பவராகி விடுவோம். மார்க்கத் தொண்டை இறை அருளாகக் கருதியே செய்கிறோம் என்று சிலர் கூறலாம். ஆனால் 100% பொறுப்பாளர்கள் இந்த தரத்தை அடையவில்லை. என்னிடம் அத்தகைய விவகாரங்கள் வருகின்றன. அதிலிருந்து தெரிய வருவதாவது, பொறுப்பாளர்களிடம் பரந்த மனப்பான்மை, சகிப்புத்தன்மை இல்லை. எவராவது அவர்களுடன் உரத்த குரலில் பேசி விட்டால், அவர்களிடம் நான் என்ற அகந்தை தலைதூக்கி பொய்யாக ரோசம் காட்டுகின்றனர். எந்தவொரு பணியையும் இறை அருளாகக் கருதி செய்பவர் ஒவ்வொன்றையும் சகித்துக் கொள்வார். தமது கண்ணியத்திற்குப் பதிலாக *அல் இஸ்ஸத்துலில்லாஹ்* -

***ஒவ்வொரு கண்ணியமும் அல்லாஹ்வுக்குரியது*** என்ற சொல் அவர்களைப் பணிவு, அடக்கம் காட்டுமாறு கட்டாயப்படுத்தி விடும்.

எனவே நுட்பமாக ஆய்வு செய்து பார்த்தால், **உங்களை மற்ற அனைவரையும் விட கீழானவராகக் கருதிக் கொள்ளுங்கள்** என்ற கூற்றின்படி செயல்படுவதில்லை என்பது தெரிய வரும். அவ்வப்போது அகந்தை தலைகாட்டி விடுகிறது. ஏதேனும் ஒரு கோணத்தில் தற்பெருமை குறுக்கே வருகிறது. ***உனது எளிய நடைமுறை எனக்கு பிடித்து விட்டது*** என்ற இல்ஹாமின் வரிகளை நாம் பேசுகின்றோம். உதாரணமும் தருகின்றோம். நாம் யாரிடம் பைஅத் செய்துள்ளோமோ அவரைப் பார்த்து இறைவன், உனது எளிய நடைமுறை எனக்கு பிடித்து விட்டது என்று கூறியுள்ளான் என்கிறோம். பிறகு அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் இதே போதனையைத் தான் தந்துள்ளார்கள் என்பதைப் பார்ப்பதில்லை. என்னுடன் உங்களுக்கு தொடர்பு இருக்குமாயின் நீங்கள் இதே நடைமுறையைத்தான் கடைபிடிக்க வேண்டும் என்று தான் கூறனார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய போதனைக்கு மீண்டும் உயிரூட்டவே நான் வந்துள்ளேன்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முன்மாதிரியை நம்முன் வைத்துள்ளார்கள். அவர்களது ஓர் அடிமை, அன்னார் என்னிடம் ஒருபோதும் எந்த விசயத்திலும் கடின வார்த்தையைப் பயன்படுத்தவில்லை என்று கூறுகிறார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கொண்ட பயத்தால் ஒருவர் நடுங்கிய போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், நான் சர்வாதிகார மன்னன் அல்ல. நான் காய்ந்த மாமிசத்தை உண்டு வந்த ஒரு பெண்ணின் மகன் தான் என்று கூறினார்கள். எனவே இந்த செயலைத்தான் ஒவ்வொரு பொறுப்பாளரும் தம்மிடம் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். ஒவ்வொரு ஜமாஅத்தின் ஊழியரும் இதனை தமது வாழ்வில் வெளிப்படுத்த வேண்டும். ஒவ்வொரு அஹ்மதியும் தமது வாழ்வில் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும்.

ஒருவருக்கு ஒரு பொறுப்பு கிடைத்தால் பணி செய்ய வாய்ப்பு கிடைத்தால் முஹம்மதிய மஸீஹின் இக்கூற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.

*நான் ஏழையாகவும், உதவியற்றவனாகவும், அறியப்படாதவன் ஆகவும், எந்த திறமையும் இல்லாதவனுமாக இருந்தேன்.*

நீங்கள் செயல் நிலையில் ஏழ்மை, திறமையின்மை, உதவியின்மை என்ற நிலைகளை வெளிப்படுத்தினீர்கள் என்றால் பிறகு தொண்டு செய்யவும் உரிமை படைத்தவராக இருப்பீர்கள். அதன் மூலமாக பிறகு மறுவுலக சுவர்க்க வாழ்விற்காக எதிர்பார்ப்பும் கொள்ள முடியும். அது இல்லையெனில் வாதத்தின் அளவில் கண்டிப்பாக நாம் சரியானவர்கள் தாம். காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு விட்டோம். ஆனால் உண்மையில் செயலளவில் நாவினால் நமது வாதத்தை நாமே கிண்டல் செய்பவர்களாவோம். எதிரிகள் எவரும் நமக்கு நஷ்டம் இழைக்கமாட்டார்கள். மாறாக நமது நஃப்ஸின் இரட்டைவேடமே நம்மை இழிவுபடுத்தி விடும். பிறகு இறைவனது கோபம் இறங்கி விடும்.

எனவே குறிப்பாக ஜமாஅத்தின் பணிக்காக நியமிக்கப்பட்டவர்கள் தம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். குறிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். ஏனெனில் வாய் அளவிலான வாதத்தால் மட்டுமோ நம்புவதனால் மட்டுமோ பைஅத்தின் உரிமை நிறைவேறாது. மாறாக வலுவான செயல் ஒளிமிக்கதாக இல்லாவிட்டால் எந்தப் பயனும் இல்லை. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள் என்று நாம் அறிவிக்கும் போது எந்த மனிதனும் மரணத்தை விட்டும் தப்பிக்க முடியாது என்றும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அடிமையாக ஒருவரை அல்லாஹ் நபியாக அனுப்ப முடியும். இன்னும் அவன் விரும்புபவருடன் பேச முடியும். வஹீ வழங்க முடியும்; ஏனெனில் அவனது எந்தப் பண்பும் எல்லைக்குட்பட்டதோ குறிப்பிட்ட காலத்திற்கு உட்பட்டதோ அல்ல என்றும், ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பர்; அன்னாரைப் பின்பற்றியதால் இறைவனால் சரீஅத் வழங்கப்படாத நபி என்ற கண்ணியம் வழங்கப்பட்டு அனுப்பப்பட்டவரை நாம் ஏற்றுள்ளோம்.

மேலும் நாம் உறுதி கொண்டுள்ளோம். திருக்குர்ஆன் கடைசி சரீஅத் உடைய வேதமாகும். 1400 வருடங்களாக தனது அசல் நிலையில் பாதுகாப்பாக உள்ளது. ஏனென்றால் இறைவனே அதனை பாதுகாப்பதற்கு பொறுப்பெடுத்துள்ளான். வேறெந்த வேதமும் அதன் அசல் வடிவத்தில் இன்று இல்லை என்றும் உலகிற்கு

அறிவிக்கிறோம். நீங்கள் குர்ஆன் அதன் அசல் வடிவத்தில் இல்லை. அல்லது சில நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது என்று நீங்கள் எவ்வளவு விரும்பினாலும் கூச்சலிடுங்கள். நாங்கள் அது தவறு என்று நிரூபித்துக் காட்டுகிறோம் என்று கூறுகிறோம்.

இஸ்லாமிய எதிரிகள் டி.வி. நிகழ்ச்சிகள் மற்றும் தமது எழுத்துக்களின் மூலம் திருக்குர்ஆன் (நவூதுபில்லாஹ்) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இறங்கவில்லை. மாறாக 6–7 நூற்றாண்டுகளுக்குப் பிறகு எழுதப்பட்டது என்று நிரூபிக்க முயல்கின்றனர். அஹ்மதிய்யா ஜமாஅத் தான் அவர்களுடன் அறைகூவலிட்டு அவர்களின் வாயை அடைத்துள்ளது. திருக்குர்ஆன் இறைவனது நூல் அல்ல என்று டி.வி சேனலில் வாதம் செயத அந்த மனிதரை நாம் போட்டிக்கு அழைத்த போது அவர் மறுத்து விட்டார். இதனை நான் கூறுவதன் நோக்கம் நமது கொள்கையாவது ஈஸா (அலை) அவர்கள் இறந்து விட்டார்கள். நமது கொள்கையாவது ஈஸா (அலை) அவர்களது இரண்டாவது வருகையாக இறைவன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை இக்காலத்தில் அனுப்பினான். நாம் உறுதி கொள்வதாவது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இறங்கிய இறுதி சரீஅத் வேதம் இன்று வரை தனது அசல் நிலையில் பாதுகாப்பாக உள்ளது. இவை அனைத்தும், மேலும் பல்வேறு கொள்கை ரீதியிலான விசயங்கள் நமது இலக்கில் நமக்கு பூரண வெற்றி பெற்றுத் தந்து விடுமா? இதற்குப் பதில் இல்லை என்பது தான். நிச்சயமாக இதற்குப் பதில் இல்லை என்பதுதான்.

ஏனெனில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய வஃபாத்தை நிரூபித்த பிறகு ஈஸா (அலை) அவர்களுடைய இரண்டாவது வருகை இந்த உம்மத்தில் நிகழ வேண்டியதிருந்தது. அது நபி (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பரின் இருப்பின் மூலம் நிறைவேற இருந்தது. இதனை நாம் وَّاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ –ஐ முன் வைத்தவாறு நமக்குள் தூய மாற்றத்தை நாம் ஏற்படுத்தாமல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சஹாபாக்களிடம் நாமும் சேர்ந்து விட்டதாக கொள்கை கொண்டிருப்பது பயன் அளிக்காது. ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எவரைப் பற்றி வரவிருப்பதாக சொல்லி இருந்தார்களோ அந்த மஸீஹ் மவ்வூது ஆவார் என்றும், அன்னாரிடம் அல்லாஹ் பேசினான் என்றும் பிரகடணம் செய்கிறோம். பிறகு அவர்களின் போதனையில் தாக்கத்தையும் நாம் நம்மிடம் வெளிப்படுத்த வேண்டும். அதுவன்றி கொள்கை, அர்த்தமற்றதாகும்.

நாம் இன்று வரை திருக்குர்ஆனை பாதுகாக்கப்பட்டதாக கருதுகின்றோம் என்றால் அதன் கட்டளைகளும் விளக்கங்களும் நமது செயல் வாழ்விற்கு அவசியமாகும். அதன்படி அமல் செய்யாமல் திருக்குர்ஆனின் பாதுகாப்பு பற்றியும் நமது அறிவிப்பு எந்தப் பயனையும் தராது. அந்த போதனையை நமது செயலில் வெளிப்படுத்தும் போது அதற்கு முழுமையான தாக்கம் ஏற்படும். ஆகவே இந்த கொள்கைகள் நமக்கு செயல் பொறுப்புகளை சுமத்துகின்றன. அதனை நிறைவேற்ற நாம் முயல வேண்டும். நமது அமலின் நிலைகளை சரி செய்ய வேண்டும். இது நம் மீதுள்ள மிகப்பெரிய பொறுப்பாகும்.

**<u>ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:</u>**

நினைவில் கொள்ளுங்கள்! வெறும் வார்த்தை, அமல் இன்றி வேலைக்கு உதவாது. வெறும் வார்த்தைகளுக்கு அல்லாஹ்விடத்தில் எந்த மதிப்பும் இல்லை.

பிறகு கூறுகின்றார்கள்: உங்கள் ஈமானை எடை போடுங்கள். அமல் ஈமானின் அணிகலன் ஆகும். மனிதனின் அமலின் நிலை சரியல்லை எனில் ஈமானும் இல்லை. ஒரு மூஃமின் அழகிய மனிதர் ஆவார். ஓர் அழகிய மனிதருக்கு சாதாரண சிறிய அணிகலனை அணிவித்தாலும் அவரை அது அதிக அழகுள்ளவராக்கி விடுகின்றது. இதுபோன்று ஒரு ஈமான் உள்ளவரை அமல் அதிக அழகுள்ளவராக்கி விடுகின்றது. கெட்ட செயல் இருந்தால் ஒன்றும் ஆகாது. மனிதனுக்குள் உண்மை ஈமான் உருவாகி விட்டால் அமல்களில் ஒரு ரசணை ஏற்படுகிறது. ஆன்மீக நுண்ணறிவு வெளிப்படுகிறது. தொழுகையைத் தொழுகைக்குரிய உரிமைக்கு ஏற்றவாறு தொழுகிறார். பாவத்தின் மீது விழிப்புணர்வு ஏற்படுகிறது. அசுத்தமான சபைகளை வெறுக்கிறார். அல்லாஹ் அவனது ரஸூல் உடைய மகத்துவத்தையும் கம்பீரத்தையும் வெளிப்படுத்துவதற்காக உள்ளத்தில் சிறப்பான உத்வேகத்தையும் துடிப்பையும் பெறுகிறார்.

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்: ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்கள் கேட்டதற்கிணங்க கூறினார்கள். சூரா ஹூது என்னை வயோதிகன் ஆக்கி விட்டது. அதாவது அதிலுள்ள கட்டளைகள் என்மீது பெரும் பொறுப்பை சுமத்தியுள்ளன. தம்மைத்தாமே சீர்திருத்துதல், அல்லாஹ்வின் கட்டளைக்கு முற்றிலும் கீழ்படியச் செய்தல். ஏனெனில் மனிதன் தன்னோடு தொடர்புடைய விசயங்களை நிறைவேற்றுவது சாத்தியமானதாகும். ஆனால் தம்மைப் போன்று

மற்றவர்களையும் ஆக்குவது எளிதன்று. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உயரிய மகிமை, தூய்மையாக்கும் ஆற்றல் ஆகியவற்றை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இந்த வகையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்தக் கட்டளையை எவ்வாறு முழுமைப்படுத்தினார்கள்? கண்ணியத்திற்குரிய சஹாபாக்களைக் கொண்ட தூய ஜமாஅத்தை தயார் செய்தார்கள். அம்மக்களைப் பார்த்து,

*(3:111)* كُنْتُمْ خَيْرَ أُمَّةٍ أُخْرِجَتْ لِلنَّاسِ என்று கூறப்பட்டது. ரலியல்லாஹு அன்ஹும் வரளு அன்ஹு என்ற சப்தம் அவர்களுக்காக வந்தது. அவர்களின் வாழ்வில் மதீனா முனவ்வராவில் எந்த நயவஞ்சகளும் இல்லை. அத்தகைய வெற்றியின் ஓர் முன்மாதிரி வேறு எந்த நபியின் வாழ்விலும் கிடைக்கவில்லை. இதில் அல்லாஹ்வின் நோக்கம் என்னவெனில், சொற்களில் மட்டுமே திருப்தி அடைந்து விடக்கூடாது. சொற்களும், காட்டுதலும் மட்டும் இருந்தால், பிறகு நமக்கும் பிறருக்கும் என்ன வித்தியாசம் இருக்கின்றது? பிறர் மீது நமக்கு என்ன சிறப்பு இருக்க முடியும்?

நீங்கள் மற்றவர்களிடம் செயல் முன்மாதிரி காட்டினால் மட்டும் போதாது. மாறாக மற்றவர்களும் ஒப்புக்கொள்ளத்தக்க பிரகாசம் அதில் காணப்பட வேண்டும். அதற்குப் பிறகு அன்னார் ஜமாஅத்திற்கு போதனை செய்தவாறு கூறினார்கள்.

நீங்கள் உங்கள் செயல் முன்மாதிரி காட்டினால் மட்டும் போதாது. அதில் பிறர் ஏற்றுக் கொள்ளத்தக்க பொலிவு காணப்பட வேண்டும். அத்தகைய பிரகாசம் இல்லையெனில் எவரும் ஏற்கமாட்டார்கள். மனிதன் அழுக்கான பொருளை விரும்புவானா? துணியில் ஒரு கறை இருந்தாலும் நன்றாக இருக்காது. அதுபோன்று உங்கள் அந்தரங்க நிலையில் தூய்மையும் பிரகாசமும் இல்லையெனில் வாங்குபவர் எவரும் இருக்க மாட்டார். ஒவ்வொருவரும் தூய பொருளையே விரும்புவர். உங்களுடைய நல்லொழுக்கம் உயர் தகுதி வாய்ந்ததாக இல்லையெனில் எந்த அந்தஸ்தையும் பெற முடியாது.

அல்லாஹ் நம்மை நல்லொழுக்கம் பெற்றவர்களாக ஆக்குவானாக! நமக்குள் தூய மாற்றத்தை ஏற்படுத்துவானாக! அதன் பிரகாசம் உலகை நம்மீது கவனம் செலுத்த வைக்கத் தகுந்ததாக இருக்கட்டுமாக! முன்பை விட அதிகம் தப்லீகின் வழி திறக்கட்டுமாக! நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பிரச்சாரத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்றுபவர்களாக இருப்போமாக!

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HAZRAT KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH Mosque, London.

on **06.12.2013**

Translated by : Maulavi M. NIZAMUDEEN Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456